



# தேவனுடைய வார்த்தையின் வல்லமை

டாக்டர். டேவிட் இளங்கோவன்

# சீர்திருத்த பாப்டிஸ்ட் திருச்சபை

**REFORMED BAPTIST CHURCH**

295, சாந்தி நகர், ஏற்காடு மெயின்ரோடு,

சேலம்-636008.

**கைபேசி எண்:** +91 98427 67184

**இணையதளம்:**

**www.tamilchristianmessages.com**

**www.reformedbaptistchurch.in**


உங்களுக்கு ஆவிக்குரிய குழப்பங்கள், கேள்விகள் இருப்பின் மேற்கண்ட கைபேசி எண்ணிற்கு தொடர்பு கொண்டு, பகிர்ந்துகொள்ளலாம். அல்லது மேற்கண்ட முகவரிக்கு கடிதம் மூலம் பகிர்ந்துகொள்ளலாம்.

இந்த சிற்றேட்டின் செய்தி உங்களுக்கு ஆசீர்வாதமாக இருந்தால் எங்களோடு பகிந்துகொள்ளுங்கள். இதனை உங்களுக்கு தெரிந்த நபர்களுக்கும் அறிமுகப்படுத்தி வையுங்கள்.

*நன்றி!!!*


**சீர்திருத்த சத்தியங்கள்**

**# சீர்திருத்த பாப்டிஸ்ட் வெளியீடு**

# தேவனுடைய வார்த்தையின் வல்லமை

*தேவனுடைய வார்த்தை புறகணிக்கப்பட்ட ஒரு காலத்தில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். “தேவன் ஒருதரம் விளம்பினார், இரண்டுதரம் கேட்டிருக்கிறேன்; வல்லமை தேவனுடையது என்பதே” (சங்கீதம் 62:11). தேவனுடைய வல்லமையை நாம் எங்கு காணமுடியும்? ஆம் நிச்சயமாக தேவன் அருளிய வேதத்தில்தான் காணமுடியும். தேவனுடைய வல்லமையை நாம் பார்க்கவேண்டுமானால் கர்த்தருடைய வேதத்தின் பக்கமாகதான் நாம் திரும்ப வேண்டும். இன்றைக்கு அநேகர் வல்லமைக்காக ஜெபிக்கிறார்கள். ஆனால் வல்லமையின் ஊற்றான வேதத்தின் பக்கம் திரும்ப மறுக்கிறார்கள். நம்முடைய சபையிலும், தனிப்பட்ட வாழ்க்கையிலும் தேவனுடைய வல்லமையைக் காணவேண்டுமானால் தேவனுடைய வார்த்தையின் பக்கமாக நாம் திரும்ப வேண்டும்.*

*“விதைக்கிறவன் ஒருவன் விதையை விதைக்கப் புறப்பட்டான்;” (லூக்கா 8:5) ஊழியர்கள் எல்லோரும் யாரென்று வேதம் சொல்லுகிறதென்றால் விதை விதைப்பவர்கள். அந்த விதை தேவனுடைய வசனம் (லூக்கா 8:11). ஆகவே ஒவ்வொரு ஊழியனும் வேத வசனத்தை விதைக்கும் படியாகவே அழைக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் தங்களுடைய தனிப்பட்ட கருத்துக்களையோ, விருப்பங்களையோ, சிந்தனைகளையோ விதைக்கும் படியாக வேதம் அனுமதிக்கவில்லை. ஆகவே வேத வசனங்களை ஒரு ஊழியக்காரன் அறிந்திருப்பதும் அதை உபயோகப்படுத்துவதும் எவ்வளவு முக்கியமான காரியம் என்பதை நாம் அறிந்து கொள்வது மிக அவசியம். வேதம் எவ்வளவு வல்லைமையானது என்று எரேமியா புத்தகத்தில் ஆண்டவர் குறிப்பிடுக்கிறார். “என் வார்த்தை அக்கினியைப்போலும், கன்மலையை நொறுக்கும் சம்மட்டியைப்போலும் இருக்கிறதல்லவோ? என்று கர்த்தர் சொல்லுகிறார்” (எரேமியா 23:29). வேதத்தில் கர்த்தர் சொல்லுகிறார் என்று பதிவு செய்துள்ளது. ஆனால் இன்றைக்கு கர்த்தர் சொல்லுகிறார் என்பது மாறிப்போய் நான் சொல்கிறேன் என்ற நிலைப்பாட்டில் பிரசங்கங்களும், போதனைகளும் மாறிவிட்டது.*

*பேதுரு பெந்தகொஸ்தே நாளில் தேவனுடைய வார்த்தையை தெளிவாய் போதிக்கிறார். பேதுரு மிகவும் எளிமையானவர். அவர் மீன் பிடிக்கும் தொழிலை செய்தவர்.*

*அவர் இயேசுவை சிலுவையில் அறைந்த மக்களிடம் தேவனுடைய வார்த்தையை எடுத்துப் பேசுகிறார். "அப்பொழுது பேதுரு பதினொருவரோடுங்கூட நின்று, அவர்களை நோக்கி, உரத்த சத்தமாய்: யூதர்களே, எருசலேமில் வாசம்பண்ணுகிற ஜனங்களே, நீங்களெல்லாரும் அறிந்துகொள்வீர்களாக, என் வார்த்தைகளுக்குச் செவிகொடுங்கள். நீங்கள் நினைக்கிறபடி இவர்கள் வெறிகொண்டவர்களல்ல, பொழுது விடிந்து மூன்றாம் மணி வேளையாயிருக்கிறதே. தீர்க்கதரிசியாகிய யோவேலினால் உரைக்கப்பட்டபடியே இது நடந்தேறுகிறது" (அப் 14-16) என்று பேதுரு தெளிவாக வேத வாக்கியங்களை விவரித்துக் காண்பிக்கிறார். அவ்வாறு பிரசங்கித்த வேளையில் ஜனங்களுடைய இருதயம் உடைபடுகிறது. இயேசு கிறிஸ்துவை சிலுவையில் அறைந்த கடின இருதயமுள்ள ஜனங்களின் மனதை பரிசுத்த ஆவியானவர் மூலம் கர்த்தர் உடைக்கிறார். "இதை அவர்கள் கேட்டபொழுது, இருதயத்திலே குத்தப்பட்டவர்களாகி, பேதுருவையும் மற்ற அப்போஸ்தலரையும் பார்த்து: சகோதரரே, நாங்கள் என்ன செய்யவேண்டும் என்றார்கள்" (அப் 2:37) இன்றைக்கு மனிதனுடைய இருதயத்தை உடைக்க நம்மால் முடியாது. முதலில் நம்முடைய இருதயத்தை உடைக்கவும் தேவனுடைய வசனம்தான் தேவைப்படுகிறது. தேவனுடைய வார்த்தையை மட்டுமே மனிதனுடைய இருதயத்தை உடைக்கும், இதைத்தவிர வேறு ஒரு வழி என்பது கிடையாது. ஆகவே இந்த சிற்றேட்டில் தேவனுடைய வார்த்தையின் வல்லமையைக் குறித்து சற்று விளக்கமாக பார்க்கலாம்.*

**1. தேவனுடைய வார்த்தை பாவத்தை குறித்து கண்டித்து உணர்த்தும்:**

*தேவனுடைய வார்த்தை மட்டுமே மனிதனுடைய பாவத்தைக் கண்டித்து உணர்த்தும். ஆகவே தான் பேதுரு ஆண்டவருடைய வார்த்தையை பிரசங்கித்தப்பொழுது ஜனங்கள் இருதயத்திலே குத்தப்பட்டு, தங்களுடைய பாவங்களை உணர்ந்தார்கள். அவர்கள் இருதயத்தில் ஆழமாக பாதிக்கப்பட்டார்கள். நம்முடைய சொந்த வார்த்தைகள் எந்த ஒரு மனிதனையும் ஆழமாக பாதிக்காது. தேவனுடைய வார்த்தை மாத்திரமே ஒரு மனிதனின் இருதயத்தில் ஆழமாக ஊடுருவக்கூடும். பரிசுத்த ஆவியானவர் இந்த வேதத்தை கொண்டுதான் ஆத்துமாக்களின் இருதயங்களை சந்திப்பார். இன்றைக்கு ஊழியர்கள் அற்புதங்களைக் கண்டால் ஜனங்கள் ஆண்டவர் பக்கமாக வந்து விடுவார்கள் என்று நினைக்கிறார்கள் ஆனால் அது மிகவும் தவறு. அற்புதங்கள் என்பது ஆதித்*

*திருச்சபையில் தேவன் பரிசுத்த ஆவியானவர் மூலமாக அப்போஸ்தலருக்கு கொடுத்த வரமாக காணப்படுகிறது. அந்த வரங்களில் மரித்தவர்களை உயிரோடு எழுப்பப்பினார்கள். கண் இல்லாதவருக்கு புதிதான ஒரு கண் கொடுக்கப்பட்டது. ஆனால் இன்றைக்கு இவ்விதமாக ஏதாவது செய்யப்படுகிறதா? அதுமட்டுமல்ல அற்புதங்கள் ஒரு மனிதனை மனந்திரும்பச் செய்யாது. இயேசுகிறிஸ்து செய்த அற்புதத்தை கண்ட ஜனங்கள் மனம் திரும்பவில்லை. "பஸ்கா பண்டிகையிலே அவர் எருசலேமிலிருக்கையில், அவர் செய்த அற்புதங்களை அநேகர் கண்டு, அவருடைய நாமத்தில் விசுவாசம் வைத்தார்கள். அப்படியிருந்தும், இயேசு எல்லாரையும் அறிந்திருந்தபடியால், அவர்களை நம்பி இணங்கவில்லை" (யோவான் 2:23-24). ஆகவே அற்புதங்களை கண்ட மக்களின் விசுவாசம் என்பது இரட்சிப்புக்கு ஏற்றதல்ல. இயேசுகிறிஸ்து ஜனங்களுடைய இருதயங்களை அறிந்திருக்கிறார். அற்புதங்கள் ஒரு மனிதனுக்கு பாவ உணர்வைக் கொடுக்காது. இன்றைக்கு எங்கு பார்த்தாலும் அற்புதங்கள் அடையாளங்கள் என்று மிகவும் மலிந்து கிடக்கிற ஒரு போதனையாக இருக்கிறது.*

*லாசரு ஐஸ்வரியவான் உவமையைப் பாருங்கள். "ஐசுவரியமுள்ள ஒரு மனுஷன் இருந்தான்; அவன் இரத்தாம்பரமும் விலையேறப்பெற்ற வஸ்திரமும் தரித்து, அநுதினமும் சம்பிரமமாய் வாழ்ந்துகொண்டிருந்தான். லாசரு என்னும் பேர்கொண்ட ஒரு தரித்திரனும் இருந்தான்; அவன் பருக்கள் நிறைந்தவனாய், அந்த ஐசுவரியவானுடைய வாசலருகே கிடந்து, அவனுடைய மேஜையிலிருந்து விழுந் துணிக்கைகளாலே தன் பசியை ஆற்ற ஆசையாயிருந்தான்; நாய்கள் வந்து அவன் பருக்களை நக்கிற்று" (லூக்கா 19-21) என்று வேதம் சொல்லுகிறது. ஐஸ்வரியவான் உடுத்தியிருந்த இரத்தாம்பர உடையானது மிகவும் விலையேறப் பெற்ற ஒன்றாகும். அந்த வஸ்திரம் தயாரிக்க அதிகமான பணம் தேவைப்படும். லாசரு மிகவும் ஏழையாக இருந்தாலும் அவன் தேவனுக்கு பயந்தவனாக காணப்பட்டான். இருவரும் மரிக்கிறார்கள். ஐஸ்வரியவான் நரகத்தில் மிகவும் கொடிய வேதனைப்படுகிறான். லாசரு பரலோகத்தில் காணப்படுகிறான். நரகத்தில் மனிதனின் உணர்வுகள் மாறி போவதில்லை. ஐஸ்வரியவான் 'தேவனுடைய வார்த்தைக்கு செவிகொடுத்து மனந்திரும்பாமல் போன படியினால் நரகத்துக்கு வந்திருக்கிறேன்' என்பதை நரகத்தில் உணருகிறான். ஐஸ்வரியவான் தன் வீட்டாரும் இரட்சிக்கப்பட வேண்டும் என்று எண்ணி லாசருவை தன் வீட்டுக்கு அனுப்ப*

*சொல்லுகிறான். "ஆபிரகாம் அவனை நோக்கி: அவர்களுக்கு மோசேயும் தீர்க்கதரிசிகளும் உண்டு, அவர்களுக்கு அவர்கள் செவிகொடுக்கட்டும் என்றான். அதற்கு அவன்: அப்படியல்ல, தகப்பனாகிய ஆபிரகாமே, மரித்தோரிலிருந்து ஒருவன் அவர்களிடத்திற்குப் போனால் மனந்திரும்புவார்கள் என்றான். அதற்கு அவன்: அவர்கள் மோசேக்கும் தீர்க்கதரிசிகளுக்கும் செவிகொடாவிட்டால், மரித்தோரிலிருந்து ஒருவன் எழுந்துபோனாலும், நம்பமாட்டார்கள் என்று சொன்னான் என்றார்" (லூக்கா 16:29-31).* அதாவது மோசேயும் தீர்க்கத்தரிசிகளும் எழுதின வேதம் இருக்கிறது, அதற்கு அவர்கள் கீழ்ப்படியட்டும் என்று சொல்லுகிறார். இதிலிருந்து நாம் வேதமானது ஒரு மனிதனின் பாவத்தை உணர்த்தவும், மனந்திரும்பவும் போதுமானதாக இருக்கிறது என்பதை அறிந்துகொள்ளுகிறோம். ஆகவே இரட்சிப்புக்கான ஒரே வழி வேதம் மாத்திரமே என்பதை நாம் உணர வேண்டும். இந்த வேதத்தை அறியாமல் சபை மக்களுக்கு நாம் போதிப்போமானால் அது பாவம்.

**2. தேவனுடைய வார்த்தை மாத்திரமே ஒரு மனிதனை மறுபிறப்படையச் செய்யும்:**

*"அழிவுள்ள வித்தினாலே அல்ல, என்றென்றைக்கும் நிற்கிறதும் ஜீவனுள்ளதுமான தேவவசனமாகிய அழிவில்லாத வித்தினாலே மறுபடியும் ஜெநிப்பிக்கப்பட்டிருக்கிறீர்களே" (1பேதுரு 1:23).*

ஒரு மனிதன் மறுபடியும் பிறக்கவில்லை என்றால் அவன் தேவனுடைய ராஜ்யத்திற்கு போக முடியாது. ஒரு மனிதன் மறுபடியும் பிறக்க தேவனுடைய வார்த்தை மாத்திரமே அடித்தளமாக காணப்படுகிறது. அழிவில்லாத வித்தினாலே மறுபடியும் பிறந்தீர்கள் என்று பேதுரு சொல்லுகிறார். தேவனுடைய வார்த்தை என்றைக்கும் அழியாது. ஆகவேதான் இயேசு கிறிஸ்து, 'வானமும் பூமியும் ஒழிந்துபோம் என் வார்த்தைகளோ ஒழிந்துபோவதில்லை' என்று சொல்லுகிறார். நம்முடைய சபை மக்கள் மறுபடியும் பிறக்க வேண்டுமானால் நாம் செய்ய வேண்டியது ஒன்றே ஒன்றுதான். அது தேவனுடைய வார்த்தையை தெளிவாக போதிக்க வேண்டும். வேதத்தை போதிக்காமல் ஆத்துமாக்கள் இரட்சிக்கப்படுவார்கள் என்பது கேள்விக்குறியே. யாக்கோபும் இதையே தான் சொல்லுகிறார், "அவர் சித்தங்கொண்டு தம்முடைய சிருஷ்டிகளில் நாம் முதற்பலன்களாவதற்கு நம்மைச் சத்திய வசனத்தினாலே ஜெநிப்பித்தார்" (யாக்கோபு 1:18). தேவனுடைய வசனத்தினால் மட்டுமே ஒரு ஆத்துமா மீண்டும் பிறக்க முடியும். மேலும்

*தேவனுடைய வார்த்தையானது ஒரு ஆத்துமாவின் இருதயத்தை ஊடுருவும் பொழுது, அந்த ஆத்துமா தெய்வீக சுபாவத்தை பெறும். "இச்சையினால் உலகத்திலுண்டான கேட்டுக்குத் தப்பி, திவ்விய சுபாவத்துக்குப் பங்குள்ளவர்களாகும்பொருட்டு, மகா மேன்மையும் அருமையுமான வாக்குத்தத்தங்களும் அவைகளினாலே நமக்கு அளிக்கப்பட்டிருக்கிறது" (2 பேதுரு 1:4). ஒரு மனிதன் மறுபடியும் பிறக்கும்பொழுது, ஆவிக்குரிய கனிகளை கொடுக்கும்படியாக அவனுக்கு புதிய சுபாவத்தை தருகிறதாக இருக்கிறது.*

**3. தேவனுடைய வார்த்தை மட்டுமே ஒரு மனிதனுக்கு விசுவாசத்தை கொடுக்கிறது:**

*மனிதனுடைய பொதுவான சுபாவம் என்னவென்றால் அவனுக்கு விசுவாசம் இருப்பதில்லை. எதற்கெடுத்தாலும் அவிசுவாசம் நிறைந்தவனாகவே காணப்படுகிறான். வேதத்தில் தேவன் 'கவலைப்படாதே' என்று கட்டளை கொடுத்திருக்கிறார். ஆனால் மனிதனோ எதற்கெடுத்தாலும் எப்பொழுதும் கவலைப்படுகிறவனாகவே காணப்படுகிறான். நமக்கு விசுவாசம் இல்லாததற்கு காரணம் நாம் வேதத்தின் பக்கமாக திரும்புவது கிடையாது. ஆகவேதான் பவுல், "விசுவாசம் கேள்வியினாலே வரும், கேள்வி தேவனுடைய வசனத்தினாலே வரும்" (ரோமர் 10:17) என்று சொல்லுகிறார். நாம் வேதத்தை வாசித்து, தியானிக்கவில்லையென்றால் நமக்கு விசுவாசம் வராது. நாம் வேதத்தை வாசிக்காமல் ஜெபம் செய்தால் விசுவாசம் வருமா? இல்லை. வேதத்தைக் கேளாதபடி செவியை விலக்குகிறவனுடைய ஜெபமும் அருவருப்பானது என்று வேதம் சொல்லுகிறது. அனேக சமயங்களில் நாம் விசுவாசத்துக்குரிய வழிகளை தெரிந்து கொள்வது கிடையாது. உதாரணமாக லூக்கா எழுதின சுவிசேஷம் பத்தாம் அதிகாரத்தில் ஒரு சம்பவத்தை நாம் வாசிக்கிறோம். "பின்பு, அவர்கள் பிரயாணமாய்ப் போகையில், அவர் ஒரு கிராமத்தில் பிரவேசித்தார். அங்கே மார்த்தாள் என்னும் பேர்கொண்ட ஒரு ஸ்திரீ அவரைத் தன் வீட்டிலே ஏற்றுக்கொண்டாள். அவளுக்கு மரியாள் என்னப்பட்ட ஒரு சகோதரி இருந்தாள்; அவள் இயேசுவின் பாதத்தருகே உட்கார்ந்து, அவருடைய வசனத்தைக் கேட்டுக்கொண்டிருந்தாள். மார்த்தாளோ பற்பல வேலைகளைச் செய்வதில் மிகவும் வருத்தமடைந்து, அவரிடத்தில் வந்து: ஆண்டவரே, நான் தனியே வேலைசெய்யும்படி என் சகோதரி என்னை விட்டுவந்திருக்கிறதைக் குறித்து உமக்குக்*

*கவையில்லையா? எனக்கு உதவிசெய்யும்படி அவளுக்குச் சொல்லும் என்றாள். இயேசு அவளுக்குப் பிரதியுத்தரமாக: மார்த்தாளே, மார்த்தாளே, நீ அநேக காரியங்களைக்குறித்துக் கவலைப்பட்டுக் கலங்குகிறாய். தேவையானது ஒன்றே, மரியாள் தன்னை விட்டெடுபடாத நல்ல பங்கைத் தெரிந்துகொண்டாள் என்றார்" (லூக்கா 10:38-42).* இன்றைக்கு அநேக ஊழியர்கள் இந்த மார்த்தாளைப் போன்று காணப்படுகிறார்கள். வேதத்தை விட்டு அங்குமிங்குமாக சுற்றித்திரிகிறார்கள். எங்கு பணம் அதிமாக கிடைக்குமென்று திட்டம் வகுத்து அங்கு செல்லுகிறார்கள். அவர்களுக்கு வேதத்தை வாசிப்பதற்கோ, ஜெபம் செய்வதற்கோ நேரமிருப்பதில்லை. இது மிகவும் வேதனையான ஒன்றாகும். தேவையானதை நாம் தெரிந்துகொள்ளுவது மிக அவசியமானது. நமக்கு விசுவாசம் வேண்டுமானால் தேவனுடைய வசனத்தை தியானிக்கும் பொழுது மாத்திரமே வரும்.

ஆதித்திருச்சபையில் அப்போஸ்தலர்கள் எவ்வாறு ஊழியம் செய்தார்கள் என்பதை நாம் பார்ப்பது நல்லது. அப்போஸ்தல நடபடிகள் 16 ஆம் அதிகாரத்தில் பவுலும் சீலாவும் தேவனுடைய வார்த்தையைப் போதிக்கிறார்கள். அதினால் அவர்கள் அநேக அடிகள் அடிக்கப்பட்டு சிறையில் அடைக்கப்படுகிறார்கள். அந்த சூழ்நிலையிலும் அவர்கள் தேவனைத் துதித்துப் பாடுகிறார்கள். அந்நேரத்தில் *"சிறைச்சாலையின் அஸ்திபாரங்கள் அசையும்படியாகப் பூமி மிகவும் அதிர்ந்தது; உடனே கதவுகளெல்லாம் திறவுண்டது; எல்லாருடைய கட்டுகளும் கழன்றுபோயிற்று. சிறைச்சாலைக்காரன் நித்திரை தெளிந்து, சிறைச்சாலையின் கதவுகள் திறந்திருக்கிறதைக் கண்டு, கட்டுண்டவர்கள் ஓடிப்போனார்களென்று எண்ணி, பட்டயத்தை உருவித் தன்னைக் கொலைசெய்து கொள்ளப்போனான். பவுல் மிகுந்த சத்தமிட்டு: நீ உனக்குக் கெடுதி ஒன்றுஞ் செய்துகொள்ளாதே; நாங்கள் எல்லாரும் இங்கேதான் இருக்கிறோம் என்றான். அப்பொழுது அவன் தீபங்களைக் கொண்டுவரச்சொல்லி, உள்ளே ஓடி, நடுநடுங்கி, பவுலுக்கும் சீலாவுக்கும் முன்பாக விழுந்து, அவர்களை வெளியே அழைத்துவந்து: ஆண்டவன்மாரே, இரட்சிக்கப்படுவதற்கு நான் என்ன செய்யவேண்டும் என்றான். அதற்கு அவர்கள்: கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை விசுவாசி, அப்பொழுது நீயும் உன் வீட்டாரும் இரட்சிக்கப்படுவீர்கள் என்று சொல்லி, அவனுக்கும் அவன் வீட்டிலிருந்த யாவருக்கும் கர்த்தருடைய வசனத்தைப் போதித்தார்கள்" (அப் 16:26-32).* இங்கு பவுலும் சீலாவும்

*இயேசு கிறிஸ்துவை விசுவாசி என்று சொல்லி, அவர்களுக்கு விசுவாசம் அளிக்கத்தக்கதான தேவனுடைய வசனத்தைப் போதிக்கிறதைப் பார்க்கிறோம். பிறகுதான் அவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுக்கிறதை நாம் வாசிக்கிறோம். ஆகவே நாம் கர்த்தருடைய வசனத்தைப் போதிக்காமல் ஆத்துமாக்களுக்கு சிறிதும் விசுவாசம் வராது என்பதை உணரவேண்டும். ஆகவேதான் யோவான் என்ன நோக்கத்திற்காக இந்த வேதம் எழுதப்பட்டுள்ளது என்பதை நமக்கு விளக்கியுள்ளதை நாம் யோவான் சுவிஷேசத்தில் பார்க்கிறோம். "இயேசு தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து என்று நீங்கள் விசுவாசிக்கும்படியாகவும், விசுவாசித்து அவருடைய நாமத்தினாலே நித்தியஜீவனை அடையும்படியாகவும், இவைகள் எழுதப்பட்டிருக்கிறது" (யோவான் 20:31). ஆகவே இயேசுகிறிஸ்துவை விசுவாசிக்காமல் ஒரு ஆத்துமாவும் பரலோகத்திற்கு போகமுடியாது. இயேசு கிறிஸ்துவை விசுவாசிக்க தேவனுடைய வசனம் தேவை என்பதை நினைவில் கொள்ளவேண்டும்.*

**4. ஆண்டவருடைய வசனம் நம்மை சுத்திகரிக்கிறது/ பரிசுத்தப்படுத்துகிறது:**

*கர்த்தருடைய வேதத்தை வாசிக்கும் பொழுது மட்டுமே தேவ ஆவியானவர் நம்முடைய பாவங்களை கண்டித்து உணர்த்துவார். வேதத்திற்கு புறம்பான காரியங்கள் நம்மில் இருக்குமானால் அதை நமக்கு வெளிப்படுத்துவார். நம்முடைய தப்பான எண்ணங்கள், நடத்தைகள், உணர்ச்சிகள் அனைத்திலும் நம்மை கண்டித்து உணர்த்துவார். "புருஷர்களே, உங்கள் மனைவிகளில் அன்புகூருங்கள்; அப்படியே கிறிஸ்துவும் சபையில் அன்புகூர்ந்து, தாம் அதைத் திருவசனத்தைக் கொண்டு தண்ணீர் முழுக்கினால் சுத்திகரித்து, பரிசுத்தமாக்குகிறதற்கும், கறைதிரை முதலானவைகள் ஒன்றும் இல்லாமல் பரிசுத்தமும் பிழையற்றதுமான மகிமையுள்ள சபையாக அதைத் தமக்குமுன் நிறுத்திக்கொள்வதற்கும் தம்மைத்தாமே அதற்காக ஒப்புக்கொடுத்தார்" (எபே 5:25-27). தேவனுடைய வசனம் மட்டுமே நம்மை சுத்திகரிக்கும். நாம் தேவனுடைய வார்த்தைக்குக் கீழ்ப்படியும்போது, தேவன் திருவசனத்தைக் கொண்டு தண்ணீர் முழுக்கினால் சுத்திகரித்து, பரிசுத்தமாக்குகிறார். தேவனுடைய வார்த்தையானது நம்முடைய இருதயத்தில் இருக்கும் அசுத்தமான காரியங்களை எடுத்துப் போடும். ஆகவே தான் இயேசு கிறிஸ்துவும் மாற்கு எழுதிய சுவிசேஷத்தில் மனிதனுடைய இருதயத்தின் உண்மையான*

*நிலையை எடுத்துக்காட்டுகிறார். "எப்படியெனில், மனுஷருடைய இருதயத்திற்குள்ளிருந்து பொல்லாத சிந்தனைகளும், விபசாரங்களும், வேசித்தனங்களும், கொலைபாதகங்களும், களவுகளும், பொருளாசைகளும், துஷ்டத்தனங்களும், கபடும், காமவிகாரமும், வன்கண்ணும், தூஷணமும், பெருமையும், மதிகேடும் புறப்பட்டுவரும். பொல்லாங்கானவைகளாகிய இவைகளெல்லாம் உள்ளத்திலிருந்து புறப்பட்டு மனுஷனைத் தீட்டுப்படுத்தும் என்றார்" (மாற்கு 7:21-23). பரிசுத்த ஆவியானவர் தேவனுடைய வார்த்தையை கொண்டு நம் உள்ளங்களில் பேசுகின்றார். நாம் தவறான காரியங்களைச் செய்யும் பொழுது நமது பாவத்தை சுட்டிக்காட்டுகிறார். அந்த எச்சரிப்பின் மூலம் நமது இருதயத்தை பாதுகாத்துக்கொள்ளமுடியும். "வாலிபன் தன் வழியை எதினால் சுத்தம்பண்ணுவான்? உமது வசனத்தின்படி தன்னைக் காத்துக்கொள்ளுகிறதினால்தானே" (சங்கீதம் 119:9). அழுக்கான இருதயத்தை கொண்டுள்ள மனிதனை தேவன் ஒருபோதும் ஊழியத்தில் பயன்படுத்தமாட்டார். அனுதினமும் தன் இருதயத்தை பரிசுத்தமாக பாதுகாத்துக் கொள்கிறவனே தேவனுக்கு பிரியமான தாசனாவான். ஆகவே நாம் அனுதினமும் வேதத்தை கிரமமாக வாசிக்க வேண்டும். மற்ற புத்தகங்களைக் காட்டிலும் அதிகமான நேரம் கொடுத்து வேதத்தை ஆராய்ந்து, தியானிக்க வேண்டும். அப்பொழுது நம் இருதயம் பரிசுத்தமாக்கப்படும்.*

**5. ஆவிக்குரிய வாழ்க்கையைக் கட்ட தேவனுடைய வார்த்தை உதவுகிறது:**

*"இப்பொழுதும் சகோதரரே, நீங்கள் பக்தி விருத்தியடையவும், பரிசுத்தமாக்கப்பட்ட அனைவருக்குள்ளும் உங்களுக்குச் சுதந்தரத்தைக் கொடுக்கவும் வல்லவராயிருக்கிற தேவனுக்கும் அவருடைய கிருபையுள்ள வசனத்துக்கும் உங்களை ஒப்புக்கொடுக்கிறேன்" (அப் 20:32)*

*தமிழ் வேதத்தில் பக்திவிருத்தியடையவும் என்று மொழிப் பெயர்க்கப்பட்டுள்ளது. ஆங்கில வேதத்தில் தெளிவாக கட்டப்படவும் (*Build you up*) என்று தெளிவாகச் சொல்லப்படுகிறது. வேதத்தை ஆராய்ந்து அறிந்து நடைமுறைப் படுத்தும்பொழுது நாம் ஆவிக்குரிய வாழ்க்கையில் அனுதினமும் வளர்ந்து கொண்டு போவோம். இன்றைக்கு அநேக ஊழியர்களை சபை மக்கள் தவறாக மதிப்பிடுகிறார்கள். காரணம் என்னவென்றால் வேதத்தின் படியான வாழ்க்கை அவர்களில் காணப்படுவதில்லை. அதினால் சபை மக்கள்*

ஊழியர்களை நம்புவதில்லை. இது மிகவும் பரிதாபமான ஒன்றாகும். நம்முடைய ஆவிக்குரிய வாழ்க்கையில் அனுதினமும் முன்னேறிச் செல்ல வேண்டும். அவ்வாறு முன்னேறுவதற்கு தேவனுடைய வார்த்தை அடிப்படைத் தேவையாக இருக்கிறது. ஆகவேதான் எரேமியா தீர்க்கதரிசி தேவனுடைய வார்த்தையை உட்கொண்டேன் என்று சொல்லுகிறார். "உம்முடைய வார்த்தைகள் கிடைத்தவுடனே அவைகளை உட்கொண்டேன்; உம்முடைய வார்த்தைகள் எனக்குச் சந்தோஷமும், என் இருதயத்துக்கு மகிழ்ச்சியுமாயிருந்தது; சேனைகளின் தேவனாகிய கர்த்தாவே, உம்முடைய நாமம் எனக்குத் தரிக்கப்பட்டிருக்கிறது" (எரேமியா 15:16). பேதுருவும் கூட சகலவித பாவங்களையும் ஒழித்துவிட்டு தேவனுடைய வசனத்தின்மேல் வாஞ்சையாய் இருங்கள் என்று சொல்கிறார். "சகல துர்க்குணத்தையும், சகலவித கபடத்தையும், வஞ்சகங்களையும், பொறாமைகளையும், சகலவித புறங்கூறுதலையும் ஒழித்துவிட்டு, நீங்கள் வளரும்படி, புதிதாய்ப் பிறந்த குழந்தைகளைப்போல, திருவசனமாகிய களங்கமில்லாத ஞானப்பாலின்மேல் வாஞ்சையாயிருங்கள்" (1பேதுரு 2:2-3).

**6. தேவனுடைய வார்த்தையானது நம்மை ஞானமுள்ளவர்களாக்கும்:**

"கிறிஸ்து இயேசுவைப்பற்றும் விசுவாசத்தினாலே உன்னை இரட்சிப்புக்கேற்ற ஞானமுள்ளவனாக்கத்தக்க பரிசுத்த வேத எழுத்துக்களை, நீ சிறுவயதுமுதல் அறிந்தவனென்றும் உனக்குத் தெரியும்" (2தீமோ 3:15).

சபையைக் கட்டுவதற்கும் குடும்பத்தை வழிநடத்துவதற்கும் நமக்கு தேவஞானம் தேவையாக இருக்கிறது. தேவனுடைய வார்த்தை மட்டுமே ஒரு மனிதனை ஞானமுள்ளவனாக்கும். "உம்முடைய வசனத்தின் பிரசித்தம் வெளிச்சம் தந்து, பேதைகளை உணர்வுள்ளவர்களாக்கும்" (119:130). சபையின் இக்கட்டான சூழ்நிலைகளில் வேதத்தின் படியாக தீர்மானம் எடுக்க ஞானம் அவசியமாக இருக்கிறது. ஆகவே நாம் ஒவ்வொருவரும் வேதத்தின் பக்கமாக திரும்பி ஞானத்தைப் பெற்றுக்கொள்ளுவது மிக அவசியமானதாகும்.

**7. கர்த்தருடைய வசனம் நமக்கு நித்திய ஜீவனைக் கொடுக்கிறது:**

"என் வசனத்தைக் கேட்டு, என்னை அனுப்பினவரை விசுவாசிக்கிறவனுக்கு நித்தியஜீவன் உண்டு; அவன் ஆக்கினைத் தீர்ப்புக்குட்படாமல், மரணத்தைவிட்டு நீங்கி, ஜீவனுக்குட்பட்டிருக்கிறான் என்று மெய்யாகவே மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்" (யோவான் 5:24).

*நாம் நித்திய ஜீவனைப் பெற்றுக் கொள்ள தேவனுடைய வார்த்தை உதவி செய்கிறது. தேவனுடைய வார்த்தை ஒரு மனிதனை நரகத்திலிருந்து தப்புவிக்க முடியும். தேவனுடைய வசனத்தைக் கேட்டு அதன்படி நடவாமல் இருந்தால் நமக்குள் நித்திய ஜீவன் இராது. தேவனுடைய வார்த்தை மட்டுமே நமக்கு நித்திய ஜீவன் உண்டு என்று சொல்லுகிறது. "உங்களுக்கு நித்தியஜீவன் உண்டென்று நீங்கள் அறியவும், தேவகுமாரனுடைய நாமத்தின்மேல் நீங்கள் விசுவாசமாயிருக்கவும், தேவகுமாரனுடைய நாமத்தின்மேல் விசுவாசமாயிருக்கிற உங்களுக்கு இவைகளை எழுதியிருக்கிறேன்" (1 யோவான் 5:13).*

**8. தேவனுடைய வார்த்தையானது மெய்யான சமாதானத்தைக் கொடுக்கும்:**

*"அவர் தம்முடைய ஜனங்களுக்கும் தம்முடைய பரிசுத்தவான்களுக்கும் சமாதானம் கூறுவார்" (சங்கீதம் 85:8).*

*இந்த உலகத்தில் பலவிதமான குழப்பமான சூழ்நிலையிலும், பாடுகள், உபத்திரவங்கள் மத்தியிலும் தேவனுடைய வார்த்தை மட்டுமே மெய்யான சமாதானத்தைக் கொடுகிறதாக இருக்கிறது. இந்த உலகத்தில் தேவனுடைய வார்த்தையைத் தவிர்த்து மற்ற எந்த காரியங்களிலும் மெய்யான சமாதானத்தை காணமுடியாது.*

**9. கர்த்தருடைய வசனம் மெய்யான சந்தோஷத்தைக் கொடுக்கிறது:**

*"உம்முடைய வார்த்தைகள் கிடைத்தவுடனே அவைகளை உட்கொண்டேன்; உம்முடைய வார்த்தைகள் எனக்குச் சந்தோஷமும், என் இருதயத்துக்கு மகிழ்ச்சியுமாயிருந்தது" (எரேமியா 15:16).*

*தேவனுடைய வார்த்தையை கிரமமாக வாசித்து தியானம் பண்ணி பழகும்பொழுது அதைவிட மெய்யான சந்தோஷம் வேறு எதுவும் இருக்க முடியாது என்பதை உணர்வோம். தேவனுடைய சந்தோஷம் நம்மில் நிலைத்திருக்கும்படிக்கும், நம்முடைய சந்தோஷம் நிறைவாயிருக்கும்படிக்கும் நாம் கர்த்தருடைய வேதத்தை ஆராய்ந்து அதன்படி செய்வது அவசியமாகும் (யோவான் 15:11). மேலும் தேவனுடைய வசனம் பொறுமையையும், ஆறுதலையும், நம்பிக்கையையும் தருகிறதாக இருக்கிறது. "தேவவசனத்தினால் உண்டாகும் பொறுமையினாலும் ஆறுதலினாலும் நாம் நம்பிக்கையுள்ள*

*வர்களாகும்படிக்கு, முன்பு எழுதியிருக்கிறவைகளெல்லாம் நமக்குப் போதனையாக எழுதியிருக்கிறது" (ரோமர் 15:4). நாம் எப்பொழுது தேவனுடைய வசனத்தைப் புறக்கணிக்கின்றோமோ அப்பொழுது இவைகளெல்லாம் நம்மைவிட்டு நீங்கிவிடும்.*

**10. தேவனுடைய வார்த்தையானது கெட்டுப்போகிறவர்களுக்கு மறைபொருளாக இருக்கும்:**

*பவுல் வேதத்தில் திருவசனத்தைப் பிரசங்கம்பண்ணு என்று தெளிவாகச் சொல்லியிருக்கிறார். மற்றெந்தக் கட்டுக் கதைகளையோ, போலியான அற்புத கூட்டங்களையோ நடத்தும்படியாக வேதம் போதிக்கவில்லை. இன்றைக்கு ஜனங்கள் அநேகம் பேர் இதனால் ஏமாந்து போகிறார்கள். தேவனாலே கூடாத காரியம் ஒன்றுமில்லை தான், ஆனால் மனிதனால் ஒரு அற்புதமும் செய்ய முடியாது. நீங்கள் தேவனுடைய வசனத்தைப் போதிக்கும்பொழுது, தேவனால் தெரிந்து கொள்ளப்பட்ட மக்கள் மட்டுமே தேவனுடைய வசனத்தை ஏற்றுக் கொள்வார்கள். ஆகவே ஊழியர்களாக நாம் பொய்களை பேசியோ அல்லது கட்டுக்கதைகளை பேசியோ ஜனங்களை ஏமாற்ற வேண்டிய அவசியமே இல்லை. அவ்விதமாக போதிக்கும்படி வேதம் நமக்கு அனுமதி கொடுக்கவில்லை. ஆகவேதான் பவுல், "எங்கள் சுவிசேஷம் மறைபொருளாயிருந்தால், கெட்டுப்போகிறவர்களுக்கே அது மறைபொருளாயிருக்கும்" (2 கொரி 4:3) என்று சொல்லுகிறார். அதனால் வேத வசனத்தை புரட்டாமலும், தத்திரமான காரியங்களை உட்புகுத்தாமலும் போதிக்கவேண்டுமென்று எச்சரிக்கிறார் (2 கொரி 4:2). விதையை (வசனத்தை) விதைப்பது மாத்திரமே நம் கடமை, விளையைச் செய்வது கர்த்தர்.*

*இயேசு கிறிஸ்துவும் இந்த உலகத்தில் ஊழியம் செய்யும் பொழுது அநேகர் இரட்சிக்கப்பட்டார்கள் என்று வேதத்தில் பார்க்க முடிவதில்லை. இயேசு கிறிஸ்துவின் போதனையைக் கேட்ட சீஷர்களும் கூட பின் வாங்கினார்கள் என்று வேதத்தில் வாசிக்கிறோம். சுவிசேஷம் எல்லோரும் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள் ஆகவே தான் இயேசு கிறிஸ்துவும் மத்தேயு எழுதிய சுவிசேஷத்தில் இவ்விதமாக ஜெபம் பண்ணுகிறார். "பிதாவே! வானத்துக்கும் பூமிக்கும் ஆண்டவரே! இவைகளை ஞானிகளுக்கும் கல்விமான்களுக்கும் மறைத்து, பாலகருக்கு வெளிப்படுத்தினபடியால் உம்மை ஸ்தோத்திரிக்கிறேன்" (மத்தேயு 11:25). எல்லோரும் சுவிசேஷத்தை ஏற்றுக்கொள்ள*

*மாட்டார்கள் என்பது உண்மைதான். இருந்தபோதிலும் எல்லோருக்கும் சுவிசேஷத்தை அறிவிக்கும் படியாக தேவன் கட்டளையிடுகிறார். ஏனெனில் தேவனால் தெரிந்து கொள்ளப்பட்ட மக்கள் யார் என்பது நமக்குத் தெரியாது. ஆகவே சுவிசேஷத்தை தெளிவாக போதிப்பது நம்முடைய கடமையாகும். ஆகவே தான் இயேசு கிறிஸ்து 'வருத்தப்பட்டுப் பாரஞ்சுமக்கிறவர்களே நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள் நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன்' என்று எல்லோருக்கும் பொதுவான அழைப்பை கொடுக்கிறார். அநேகர் வேதத்தைத் தவறாக புரிந்து கொள்ளுகிறார்கள். அப்படிப்பட்டவர்களுக்கும் வேதம் ஒரு மறை பொருள் தான். "நீங்கள் வேதவாக்கியங்களையும், தேவனுடைய வல்லமையையும் அறியாததினாலல்லவா தப்பான எண்ணங் கொள்ளுகிறீர்கள்?" (மாற்கு 12:24). ஆகவேதான் பவுல் கொரிந்தியருக்கு எழுதின நிருபத்தில், "ஜென்மசுபாவமான மனுஷனோ தேவனுடைய ஆவிக்குரியவைகளை ஏற்றுக்கொள்ளான்; அவைகள் அவனுக்குப் பைத்தியமாகத் தோன்றும்; அவைகள் ஆவிக்கேற்றபிரகாரமாய் ஆராய்ந்து நிதானிக்கப்படுகிறவைகளானதால், அவைகளை அறியவுமாட்டான். ஆவிக்குரியவன் எல்லாவற்றையும் ஆராய்ந்து நிதானிக்கிறான்; ஆனாலும் அவன் மற்றொருவனாலும் ஆராய்ந்து நிதானிக்கப்படான்" (1கொரி 2:14-15). தேவனால் தெரிந்து கொள்ளப்படாத மனிதனுக்கு சுவிசேஷமானது பைத்தியமாகத்தான் தோன்றும். தேவனால் தெரிந்துகொள்ளப்பட்ட மனிதன் மாத்திரமே தேவனுடைய வசனத்தை ஏற்றுக்கொண்டு மனந்திரும்புவான்.*

**11. கர்த்தருடைய வசனம் தவறான உபதேசங்களிலிருந்து நம்மைக் காத்துக்கொள்ள உதவுகிறது:**

*இன்றைக்கு திருச்சபைகள் வேதத்தைப் புறக்கணித்துவிட்டு அநேக கள்ளப் போதனைகளை உட்புகுத்தியுள்ளது. இதில் பெந்தகோஸ்தே சபைக்கு பெரும் பங்கு உள்ளது. நாளுக்கு நாள் கள்ளப் போதனைகள் அதிகரித்துக் கொண்டே போகிறது. இவ்விதமான தவறான போதனைகளிலிருந்து நம்மையும், நம்முடைய திருச்சபையும் பாதுகாத்துக்கொள்ள தேவனுடைய வார்த்தை மட்டுமே தேவையாக இருக்கிறது. அப்போஸ்தல நடபடிகள் 17-ம் அதிகாரத்தில் பவுல் பெரோயா பட்டணத்தில் கர்த்தருடைய வசனத்தைப் போதிக்கிறார். "அந்தப் பட்டணத்தார் மனோவாஞ்சையாய் வசனத்தை ஏற்றுக்கொண்டு, காரியங்கள் இப்படியிருக்கிறதா என்று*


*தினந்தோறும் வேதவாக்கியங்களை ஆராய்ந்துபார்த்ததினால், தெசலோனிக்கேயில் உள்ளவர்களைப்பார்க்கிலும் நற்குணசாலிகளாயிருந்தார்கள்" (அப் 17:11). போதித்தது பவுலாக இருந்த பொழுதும் அந்த பட்டணத்தார் தேவனுடைய வார்த்தையை ஆராய்ந்து பார்க்கிறார்கள். அதனால் அவர்கள் நற்குணசாலிகளாகக் காணப்பட்டார்கள். ஆனால் இன்றைய நாட்களில் அவ்விதமான மக்களை காண்பது அரிதாக இருக்கிறது. ஆகவேதான் பவுல், "நான் போனபின்பு மந்தையைத் தப்பவிடாத கொடிதான ஓநாய்கள் உங்களுக்குள்ளே வரும். உங்களிலும் சிலர் எழும்பி, சீஷர்களைத் தங்களிடத்தில் இழுத்துக்கொள்ளும்படி மாறுபாடானவைகளைப் போதிப்பார்களென்று அறிந்திருக்கிறேன். ஆனபடியால், நான் மூன்று வருஷ காலமாய் இரவும் பகலும் கண்ணீரோடே இடைவிடாமல் அவனவனுக்குப் புத்தி சொல்லிக் கொண்டு வந்ததை நினைத்து விழித்திருங்கள்" (அப் 20:29-31) என்று சொன்னார். இன்றைக்கு ஜனங்கள் சபையில் போதிப்பதை வேதத்தில் இருக்கிறதா இல்லையா என்று ஆராய்ந்து பார்ப்பதே கிடையாது. ஆகவே தவறான உபதேசங்கள் மலிந்து போய்க் கிடக்கின்றது. வேதத்தை புறக்கணிக்கிக்கும் பொழுது தவறான உபதேசங்கள் உட்புகுந்து விடுகிறது. "பொல்லாதவர்களும் எத்தர்களுமானவர்கள் மோசம்போக்குகிறவர்களாகவும், மோசம் போகிறவர்களாகவுமிருந்து மேன்மேலும் கேடுள்ளவர்களாவார்கள். நீ கற்று நிச்சயித்துக்கொண்டவைகளில் நிலைத்திரு" (2தீமோ 3:13-14). ஆகவே நாம் பிசாசின் தந்திரங்களுக்கு விலகி, நம்மைப் பாதுகாத்துக் கொள்ளும்படி வேதத்தை அனுதினமும் தியானிப்பது நமக்கும், நமது குடும்பத்திற்கும், நமது திருச்சபைக்கும் நல்லது.*

"துன்மார்க்கருடைய ஆலோசனையில் நடவாமலும், பாவிகளுடைய வழியில் நில்லாமலும், பரியாசக்காரர் உட்காரும் இடத்தில் உட்காராமலும், கர்த்தருடைய வேதத்தில் பிரியமாயிருந்து, இரவும் பகலும் அவருடைய வேதத்தில் தியானமாயிருக்கிற மனுஷன் பாக்கியவான்" *(சங்கீதம் 1:1-2)*

**கர்த்தர் தாமே இந்த வார்த்தைகளை ஆசீர்வதிப்பாராக! ஆமென்!**

# Tamil Daily Devotion
# 2019

- தின தியானம்
- நூற்றுக்கணக்கான பிரசங்கங்கள்
- இலவச புத்தகங்கள்
- நினைப்பூட்டி
- நேரடி ஒளிபரப்பு
- ரேடியோ 24x7




Available on the App Store

Get it on Google play

## ANDROID

SCAN THE CODE WITH YOUR MOBILE DEVICE TO DOWNLOAD OR USE THE LINK BELOW IN THE BROWSER

http://bit.do/dailydev

## iPHONE & iPAD

SCAN THE CODE WITH YOUR IPAD OR IPHONE TO DOWNLOAD OR TYPE THE LINK BELOW IN YOUR BROWSER

http://bit.do/itunesdailydev

Visit our Website

www.tamilchristianmessages.com